අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - 2026**
**கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை - 2026**
General Certificate of Education (Adv. Level ) Examination - 2026

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය
**பயிற்சி வினாத்தாள்**
**Practice Paper**

# ලංකා ඉතිහාසය
# History of Sri Lanka
# இலங்கை வரலாறு



Question Paper – I-II வினாப்பத்திரம் – I-II (மொழி மூலம் - தமிழ்)

**අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය**
**ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව**
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு
Ministry of Education,Higher Education and vocational Education
National Languages and Humanities Branch

கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

| 25 | T | I |
|---|---|---|

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - 2026
கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை - 2026
General Certificate of Education (Adv. Level ) Examination - 2026

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (I කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி I)
History of Sri Lanka I (Part I)

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

இலங்கை வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி 1978

சுட்டெண் - ........................................................

அறிவுறுத்தல்கள் -
- இவ்வினாத்தாள் பகுதி I, பகுதி II ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டது.
- பகுதி I இல் 1 – 40 வரையிலான எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி I இற்கான விடைத்தாள்களை பகுதி II இற்கான விடைத்தாள்களுடன் இணைத்து கையளிக்குக.

பகுதி - I

- இல 01 தொடக்கம் 10 வரை தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மாத்திரம் ஏதோ ஒரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருந்தாது உள்ளது. அந்த பொருந்தாத பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**1.** **(1)** சுலைமான் **(2)** அபூசைத் **(3)** அல்பிருனி
**(4)** மசூதி **(5)** ஸ்ராபோ **(.....)**

**2.** **(1)** காசிமோட்டை கல்வெட்டு **(2)** தம்மன்னாவ கல்வெட்டு **(3)**குருணாகல் கலஉட கல்வெட்டு
**(4)** மண்டகல கல்வெட்டு **(5)** ஹபெஸ்ஸ கல்வெட்டு **(.....)**

**3.** **(1)** பாகியன்கல **(2)** ரஞ்சாமடம **(3)** யட்டிகல்பொத்த
**(4)** ஹல்துமுல்ல **(5)** பெரகல **(.....)**

**4.** **(1)** உத்தியன் **(2)** வலகம்பா **(3)** மகாசிவன்
**(4)** சூரதிஸ்ஸன் **(5)** அசேலன் **(.....)**

**5.** **(1)** சேத்தியகர **(2)** பட்டிமாகர **(3)** போதிகர
**(4)** அரச சபை மண்டபம் **(5)** பதனாகர **(.....)**

**6.** **(1)** கோட்டை **(2)** கம்பளை **(3)** யாப்பஹுவ
**(4)** குருணாகல் **(5)** தம்பதெனியா **(.....)**



இரண்டாம் பக்கத்தைப் பார்க்க

7. (1) றொபட் பிரௌன்றிக் (2) பெட்ரிக் நோர்த் (3) தியோகு தி மெல்லோ
(4) தோமஸ் மெயிட்லண்ட் (5) டொரின்டன் (.....)

8. (1) தென்னை வரி (2) உடல் வரி (3) உப்பு வரி
(4) மீன் வரி (5) மது வரி (.....)

9. (1) கெப்பட்டிப்பொல (2) மடுகல்ல (3) எகலபொல
(4) கிவுலேகெதர (5) ஹங்குரன்கெத்த டிங்கிரால (.....)

10. (1) கோப்பி (2) தேயிலை (3) கொக்கோ
(4) ஏலம் (5) சாதிக்காய் (.....)

- இல 11 – 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடி சொற்கள்** வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, **அதன் இலக்கத்தை எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

11. (1) அரிஸ்டோட்டில் - டிமுண்டோ
(2) மெகஸ்தினிஸ் - இண்டிகா
(3) தொலமி - பூகோள சாஸ்திர பிரவேசம்
(4) கொஸ்மஸ் - நெச்சுராலிஸ் ஹிஸ்டோரியா
(5) புரோகோபியஸ் - பாரசீக யுத்தம் (.....)

12. (1) குமாரதாஸ - ஜானகிஹரணய
(2) 4ஆம் சேனன் - சியபஸ்லகர
(3) 5ஆம் காசியப்பன் - தம்பியா அட்டுவா கெடபதய
(4) 2ஆம் பராக்கிரமபாகு - பூஜாவலிய
(5) 6ஆம் பராக்கிரமபாகு - ருவன்மல் நிகண்டு (.....)

13. (1) அநுராதபுரம் - ஏழு திராவிடர்களின் ஆக்கிரமிப்பு
(2) பொலன்னறுவை - மாகனின் ஆக்கிரமிப்பு
(3) தம்பதெனியா - சந்திரபானுவின் ஆக்கிரமிப்பு
(4) குருணாகல் - போதா மாபானனின் கிளர்ச்சி
(5) கம்பளை - ஜோதியவின் கிளர்ச்சி (.....)

14. (1) எரபத்தொட்ட - சுன்ஹத்த பிரிவேனா
(2) வீதாகம - ஶ்ரீ கனானந்த பிரிவேனா
(3) தொட்டகமுவே - விஜயபா பிரிவேனா
(4) பெபிலியானே - சுனேத்ராதேவி பிரிவேனா
(5) கேரகல - பத்மாவதி பிரிவேனா (.....)

15. (1) கொனப்பு பண்டார - முதலாம் விமலதர்மசூரியன்
(2) டிகிரி பண்டார - முதலாம் இராஜசிங்கன்
(3) மகா அஸ்தான இளவரசன் - இரண்டாம் இராஜசிங்கன்
(4) சக்ராயுத இளவரசன் - ஆறாம் விஜயபாகு
(5) அம்புலுகல இளவரசன் - ஏழாம் புவனேகபாகு (.....)



மூன்றாம் பக்கத்தைப் பார்க்க

- 16 - 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள்/திகதிகளின் தொகுதிகள் X,Y என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள்/ கூற்றுகள்/திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள் எழுதுக.

16.

| X | Y |
|---|---|
| (i) பொற்சாசனம் | A ஹோப்பிட்டிகம |
| (ii) செப்பு சாசனம் | B வல்லிபுரம் |
| (iii) தூண் கல்வெட்டு | C மிகிந்தலை |
| (iv) சுவர்க் கல்வெட்டு | D பனாகடுவ |
| (v) குன்றுக் கல்வெட்டு | E தோணிகல |

(1) ABDCE (2) ACBDE (3) BDACE (4) CEBDA (5) DEABC (.....)

17.

| X | Y |
|---|---|
| (i) முதலாம் விஜயபாகு | A திரிலோக சுந்தரி |
| (ii) மானாபரணன் | B லோகநாதா |
| (iii) கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன் | C இரத்னாவலி |
| (iv) சிறிவல்லபன் | D ரூபவதி |
| (v) முதலாம் பராக்கிரமபாகு | E சுகலா |

(1) ABDEC (2) ACBED (3) BADCE (4) DEBCA (5) ECBAD (.....)

18.

| X | Y |
|---|---|
| (i) காவிய சேகர | A ஸ்ரீ இராமசந்திர பாரதி |
| (ii) லோவெட சங்கராவ | B வேதேக தேரர் |
| (iii) குத்தில காவியம் | C தொட்டகமுவே ஸ்ரீ ராகுல தேரர் |
| (iv) லோகோபகாரய | D ரணஸ்கல்லே தேரர் |
| (v) பக்தி சதகம் | E வீதாகம மகா மைத்திரி தேரர் |

(1) ABCDE (2) AEBDC (3) CAEBD (4) CEBDA (5) ECABD (.....)

19.

| X | Y |
|---|---|
| (i) சிபெல் த வோட் | A முதலாம் விமலதர்மசூரியன் |
| (ii) ஜோன் பைபஸ் | B கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் |
| (iii) மெக்டோவல் | C இராஜாதி இராஜசிங்கன் |
| (iv) ஹியு பொயிட் | D ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் |
| (v) ஜெரால்ட் ஹல்ப்ட் | E இரண்டாம் இராஜசிங்கன் |

(1) ABDCE (2) ADBCE (3) CDABE (4) CEBDA (5) DAEBC (.....)



நான்காம் பக்கத்தைப் பார்க்க

20.

| | X | Y |
|---|---|---|
| | (i) 1947 பொதுத் தேர்தல் | A டட்லி சேனாநாயக்க |
| | (ii) 1952 பொதுத் தேர்தல் | B சிறிமாவோ பண்டாரநாயக்க |
| | (iii) 1956 பொதுத் தேர்தல் | C ஜே. ஆர். ஜயவர்தன |
| | (iv) 1960 ஜூலை பொதுத் தேர்தல் | D டி. எஸ்.சேனாநாயக்க |
| | (v) 1977 பொதுத் தேர்தல் | E எஸ்.டப்ளியு.ஆர்.டி பண்டாரநாயக்க |

**(1) ABDEC (2) ACBDE (3) DAEBC (4) DAECB (5) DCAEB (.....)**

- 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.

21. **மத்திய கற்கால குடியிருப்புகள்**

(1) இற்றைக்கு ஏறத்தாழ 40000 ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்றுள்ளன.

(2) உணவு மற்றும் நீரினை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரதேசங்களைத் தெரிவு செய்து கொண்டுள்ளனர்.

(3) இக்கால மனிதன் பலாங்கொடை மனிதன் என அழைக்கப்பட்டான்.

(4) இயற்கையான கற்குகைகளையும் திறந்த வெளிகளையும் வசிப்பிடங்களாகத் தெரிவு செய்து கொண்டுள்ளனர்.

(5) இலங்கையின் உலர் வலயத்தில் மாத்திரம் குடியிருப்புகள் பரவலடைந்தன. (.....)

22. **முதலாம் விஜயபாகு மன்னனின் ஆட்சிக்கால முக்கியத்துவம்,**

(1) இராசரட்டையை சோழரிடமிருந்து மீட்டமை.

(2) பொலன்னறுவையைத் தலைநகராக்கியமை.

(3) பல்லுகவின் ஆக்கிரமிப்பை முறியடித்தமை.

(4) பர்மாவிலிருந்து உபசம்பதாவை வரவழைத்து பௌத்த சாசனத்தைக் கட்டியெழுப்பியமை.

(5) அநுராதபுரக்காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த பண்டைய நிர்வாக முறையை மீண்டும் கட்டியெழுப்பியமை. (.....)

23. **அழகேஸ்வர பரம்பரை,**

(1) இந்திய கேரளப் பிரதேசத்தின் வஞ்சிபுரத்திலிருந்து வருகைதந்த குழுவினராவர்.

(2) றைகமவை மையமாகக் கொண்டு ஆட்சியை முன்னெடுத்தனர்.

(3) நிஸ்ஸங்க அழகக்கோனார் மூன்றாம் விக்கிரமபாகுவின் பிரதம அமைச்சராக விளங்கினார்.

(4) நிஸ்ஸங்க அழகேஸ்வரன் செங்கோவினால் கைதியாக சீனாவுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

(5) நிஸ்ஸங்க அழகக்கோனாரினால் கோட்டை அரண் நிர்மாணிக்கப்பட்டது. (.....)

24. **கோல்புறூக் ஆணைக்குழுவின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள்**

(1) கட்டாய சேவை இராசகாரிய முறை அறிமுகப்படுத்தப்பட்டமை

(2) அரசின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டமை

(3) அரச காணிகள் வெளிநாட்டவர்களுக்கு விற்கப்பட்டமை

(4) தனியார் முதலீட்டாளர்களை ஊக்குவித்தமை

(5) அரச செலவினங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை (.....)



ஐந்தாம் பக்கத்தைப் பார்க்க

25. **கி.பி. 1818 சுதந்திரப் போராட்டம்**

(1) மொல்லிகொட மற்றும் எக்னெலிகொட ஆகியோர் ஆங்கிலேயருக்குச் சார்பாக செயற்பட்டமை.

(2) துரைசாமி என்பவர் அரசனாக வெளிப்பட்டமை.

(3) மாத்தளை பிரதேசத்தில் ஆரம்பமானமை.

(4) போராட்டம் முறையாகத் திட்டமிடப்படாமை.

(5) கெப்பட்டிப்பொல சிங்களக் கிளர்ச்சியாளர்கள் பக்கம் சார்ந்தமை.

(.....)

- 26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A),(B),(C),(D) என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவு செய்து

  (A) யும் (B) யும் மாத்திரம் சரியாயின் .................................................. 1 எனவும்
  (A) யும் (C) யும் மாத்திரம் சரியாயின்.................................................. 2 எனவும்
  (B) யும் (C) யும் மாத்திரம் சரியாயின்.................................................. 3 எனவும்
  (C) யும் (D) யும் மாத்திரம் சரியாயின்.................................................. 4 எனவும்

  **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ....... 5 எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| (A) யும் (B) யும் மாத்திரம் சரி | (A) யும் (C) யும் மாத்திரம் சரி | (B) யும் (C) யும் மாத்திரம் சரி | (C) யும் (D) யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

26. தீபவம்சம் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) தற்போது எஞ்சியுள்ள இலங்கையின் மிகப் பழமையான வம்சக்கதையாகும்.

(B) கி.பி. ஐந்தாம் அல்லது ஆறாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டுள்ளது.

(C) புத்த பெருமானின் காலம் முதல் மகாசேன மன்னனின் ஆட்சிக்கால முடிவு வரையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(D) இலங்கை வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கற்பதற்கான முக்கிய மூலாதாரமொன்றாகும். (.....)

27. பண்டுகாபய மன்னன் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) ஆரிய குலத்தை சேர்ந்தவனாவான்.

(B) இயக்கர் கோத்திர மக்கள் குழுக்களின் உதவியைப் பெற்றுக் கொண்டான்.

(C) மகாமேகவன பூங்காவை நிர்மாணித்தான்.

(D) உபதிஸ்ஸகாமவை ஆட்சி மத்திய நிலையமாகக் கொண்டிருந்தான். (.....)

28. யாழ்ப்பாண இராசதானி பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) பொலன்னறுவை இராசதானி காலத்திலிருந்தே சுயாதீன ஆட்சி மையமொன்றாக விளங்கியது.

(B) ஆரிய சக்கரவர்த்தி பரம்பரையால் ஆட்சி முன்னெடுக்கப்பட்டது.

(C) சப்புமல் இளவரசனால் யாழ்ப்பாணம் கோட்டை இராச்சியத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

(D) போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்ற முடியாமற் போனது. (.....)



ஆறாம் பக்கத்தைப் பார்க்க

**29.** மிசனரி இயக்கம் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

**(A)** சமய பிரசார முறையாகக் கல்வி, எழுத்தாக்கம், போதனைகளைப் பின்பற்றியமை.

**(B)** பாரம்பரிய சமயங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பட்டமை.

**(C)** கிறிஸ்தவர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் விசேட வரப்பிரசாதங்களை வழங்கியமை.

**(D)** பிரிவேனாக்களுக்கு அரச அனுசரணை வழங்கியமை

**(.....)**

**30.** முதலாம் குடியரசு யாப்பு பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

**(A)** இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என அழைக்கப்பட்டது.

**(B)** நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி அறிமுகப்படுத்தப்பட்டது.

**(C)** தேசிய அரசுப் பேரவை தாபிக்கப்பட்டது.

**(D)** செனட் சபை நீக்கப்பட்டது. **(.....)**

- 31 தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையை தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

**31.** இத்தாலிய இனத்தவரான மார்க்கோ போலோ எனும் நாடுகாண் பயணி இலங்கைக்கு வருகை தந்த காலப்பகுதி யாது?

**(1)** தம்பதெனியா **(2)** யாப்பஹுவ **(3)** குருணாகல்

**(4)** கம்பளை **(5)** கோட்டை **(.....)**

**32.** வட இந்திய ஆட்சியாளனான சமுத்திரகுப்த மன்னனுடன் தொடர்புகளைப் பேணிவந்த ஆட்சியாளன் யார்?

**(1)** சிறிமேகவர்ணன் **(2)** தாதுசேனன் **(3)** வசபன்

**(4)** இரண்டாம் சேனன் **(5)** மானவர்மன் **(.....)**

**33.** அம்பன்வெலராலவின் தலைமையில் ஏற்பட்ட கிளர்ச்சியை எதிர்கொண்ட கண்டி ஆட்சியாளன் யார்?

**(1)** செனரத் **(2)** இரண்டாம் இராஜசிங்கன் **(3)** வீர பராக்கிரம நரேந்திரசிங்கன்

**(4)** ஸ்ரீ விஜய இராஜசிங்கன் **(5)** கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் **(.....)**

**34.** புகையிலை வர்த்தகத்தினை அரசின் ஏகபோக உரிமையாக மாற்றிய ஆளுநர் யார்?

**(1)** பெட்ரிக் நோர்த் **(2)** தோமஸ் மெயிட்லண்ட் **(3)** டொரின்டன்

**(4)** ஸ்டுவர்ட் மெகன்சி **(5)** ரொபட் பிரௌன்றிக் **(.....)**

**35.** வித்தியாலங்கார பிரிவேனாவை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்ற பல்கலைக்கழகம் எது?

**(1)** கொழும்பு **(2)** பேராதனை **(3)** களனி **(4)** ஜயவர்தனபுர **(5)** மொரட்டுவ

**(.....)**



ஏழாம் பக்கத்தைப் பார்க்க

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1,2,3,4,5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விவரிக்கின்றது. |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| **36** | விஜயன் உள்ளிட்ட 700 பேர் இலங்கைக்கு வருகை தந்து குடியேற்றங்களை நிறுவிக் கொண்டனர். | அக்குடியேற்றங்கள் உலர் வலயத்தில் மல்வத்து, கலாஓயா நதிக்கரைகளை அண்டி தோற்றம் பெற்றுள்ளன. | **(.....)** |
| **37** | இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட முதல் படையெடுப்பாக சேனன் குத்திகனின் படையெடுப்பு கருதப்படுகின்றது. | சோழ படையெடுப்பு காரணமாக அநுராதபுர இராசதானி வீழ்ச்சியுற்றது. | **(.....)** |
| **38** | கல்ஓயா இலங்கையின் முதலாவது பல நோக்கு அபிவிருத்தித் திட்டமாகும். | ஜே.ஆர். ஜயவர்தன அவர்களால் மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. | **(.....)** |
| **39** | குறுமக்கலம் யாப்பு சீர்திருத்தத்தின் கீழ் இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது. | இலங்கையின் தற்போதைய சட்டத் தொகுப்பானது உரோமன் டச்சு சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. | **(.....)** |
| **40** | 1818 கண்டி பிரகடனத்தின் மூலம் ரதல பிரதானிகளின் உரிமைகள் மற்றும் அதிகாரம் என்பன பாதுகாக்கப்பட்டன. | ஶ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனால் போகம்பரவாவி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. | **(.....)** |



எட்டாம் பக்கத்தைப் பார்க்க

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

25 T II

# අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - 2026
## கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2026
## General Certificate of Education (Adv. Level ) Examination - 2026

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (II කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி II)
History of Sri Lanka I (Part II)

இலங்கை வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி 1978 வரை

**அறிவுறுத்தல்கள்**
- **நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்**
- **பகுதி II ஆனது A,B,C ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது.**
- **பகுதி A யின் வினா கட்டாயமானது.**
- **பகுதி B,C ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கு விடை தருக**

**(முதலாம் வினாவிற்கு விடையளிப்பதற்கு இலங்கை புறவுருவப்படம் பகுதி I உடன் வழங்கப்பட்டுள்ளது.)**

### பகுதி A

1. உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| (i) யான்ஓயா | **(ii)** தெவுந்தர | **(iii)** இரணைமடு நீர்த்தேக்கம் | (iv) மட்டக்களப்பு |
| (v) கற்பிட்டி | (vi) காலி | (vii) றைகம | (viii)கன்னொருவ |
| (ix) கிரிந்தி ஓயா | (x) மாத்தளை | (xi) மேல் மாகாணம் | (xii) நல்லூர் |

**(சரியாக குறித்துப் பெயரிடுவதற்கு 1 புள்ளி வீதம் )**

### பகுதி B

**2.** இலங்கை வரலாற்றைக் கற்கும் போது தொல்பொருள் மூலாதாரங்களின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுக.

(16 புள்ளிகள்)

**3.** "துட்டகைமுனு மன்னனின் வெற்றிப் பயணத்திற்கு வழியமைத்துக் கொடுத்தவர் காவன்திஸ்ஸ மன்னனாவார்"

**(i)** காவன்திஸ்ஸ மன்னனின் ஆட்சி மையத்தைப் பெயரிடுக. (1 புள்ளி)

**(ii)** காவன்திஸ்ஸ மன்னனின் பட்டத்து ராணி யார்? (1 புள்ளி)

**(iii)** உறுகுணை வம்ச ஆட்சியாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட தூபிகள் இரண்டினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

**(iv)** மேலே தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றி கலந்துரையாடுக. (12 புள்ளிகள்)

**4.** இராசரட்டை நாகரிகத்தின் பொருளாதாரம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.

**1.** விவசாயம்
**2.** கைத்தொழில்
**3.** வர்த்தகம்

(16 புள்ளிகள்)



ஒன்பதாம் பக்கத்தைப் பார்க்க

5. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
   **(i)** மத்திய மலைநாடு
   **(ii)** தேவநம்பியதீச மன்னன்
   **(iii)** யாப்பஹுவ இராசதானி
   **(iv)** தம்பதெனிய இராசதானிக் கால கல்வி மற்றும் கலாசார வளர்ச்சி

(புள்ளிகள் **08 x 2 = 16 )**

பகுதி **C**

**6.** இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட போர்த்துக்கேய மற்றும் ஒல்லாந்தர் கால நிர்வாக நடவடிக்கைகள் பற்றி பின்வரும் துறைகளின் கீழ் ஒப்பிட்டு ஆராய்க.
   (i) பொருளாதாரக் கொள்கை
   (ii) சமயக் கொள்கை (16 புள்ளிகள்)

**7.** கி.பி.1848 சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்றுப் பின்னணி, போராட்டத்திற்கான காரணங்கள், போராட்டத் தலைவர்கள், அதன் விளைவுகள் என்பவற்றை விளக்குக.

(16 புள்ளிகள்)

**8.** இலங்கையின் அரசியல் யாப்பு வரலாற்றில் முக்கிய மைல் கல்லொன்றாக டொனமூர் யாப்பு கருதப்படுகின்றது.

(i) டொனமூர் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இந்நாட்டின் பிரித்தானிய ஆளுநராக பதவி வகித்தவர் யார்? (1 புள்ளி)

(ii) டொனமூர் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவரைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(iii) டொனமூர் யாப்பிற்கு முன்னர் நடைமுறையில் இருந்த மனிங் டெவன்சயர் யாப்பின் பண்புகளை விளக்குக. (4 புள்ளிகள்)

(iv) டொனமூர் யாப்பின் சிறப்பம்சங்களை விபரிக்குக. (9 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
   **(i)** கண்டியர் கால சமூக ஒழுங்கமைப்பு
   **(ii)** இலங்கை தேசிய சங்கம்
   **(iii)** பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் கீழான கரையோரப் பிரதேச நிர்வாகம்
   **(iv)** மகாவலி அபிவிருத்தித் திட்டம்.

(புள்ளிகள் **08 x 2 = 16 )**

**கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ ) විභාගය - 2026**
**கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2026**
**General Certificate of Education (Adv. Level ) Examination - 2026**

| | | |
|---|---|---|
| ශ්‍රී ලංකා ඉතිහාසය I<br>இலங்கை வரலாறு I<br>History of Sri Lanka I | 25 | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..................................

